1990 மே 8]

பாரம் தூக்கி வாங்கியதில் முறைகேடுகள்.

*5616 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுப் பணித் துறை, நீர்ப்பாசனம் பிரிவிற்கு 1987–88-ல் பாரம் தூக்கி வாங்கியதில் முறைகேடுகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறத்தல்.

*848 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி:

திரு. ஆ. நடராசன் :

திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவையில் மூடப்பட்டுள்ள எவரெஸ்ட் இன்ஜினியரிங் நம்பர் 2, நம்பர் 3, அதன் குரூப் கம்பெனிகள் ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்டிரீஸ், ராமகிருஷ்ணா மற்றும் நியூசிட்டி ஆகிய தொழிற்சாலைகளை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கக் கூடிய திருவாளர்கள் எவரெஸ்ட் இன்ஜினியரிங் நிறுவனம் தொழில் வணிக துறையில் ஒரு சிறு தொழில் நிறுவனமாக 31—1—1977-ல் பதிவு பெற்று இருக்கின்ற ஒரு நிறுவனம் ஆகும். நிதி நெருக்கடி காரணமாக அந்த நிறுவனம் 1986 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளது. இது ஒரு கூட்டு பங்குதாரர் அமைப்பாகும். இந்த நிறுவனத்தின் மூன்று துணை

நிறுவனங்களான ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் ஆகிய மூன்று நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் மீண்டும் செயல்படுவதற்காக இந்தியத் தொழில் மறு அமைப்பு வங்கி அதாவது இன்டஸ்ட்ரியல் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பேங்க்-இன் சென்னை கிளையை அணுகி சுமார் 2¼ கோடி ரூபாய் கடன் உதவி கேட்டு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். இந்த வங்கி இந்த விண்ணப்பத்தைக் கல்கத்தாவில் உள்ள இந்த வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பியது. வெகு விரைவில் கடன் தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த நிர்வாகம் மீண்டும் அந்த நிறுவனத்தைத் திறப்பதற்கு வேண்டிய நிலையில் உள்ளார்கள். அதற்கிடையில் நியூ சிட்டி இன்ஜினியரிங் என்ற நிறுவனத்தை கோவையில் உள்ள 'ஏ டூ இஸ்ஸட்' என்ற வேறு ஒரு நிறுவனம் ஏற்று நடத்த முன்வந்திருக்கிறது.

திரு. யு. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் அமைந்திருக்கக்கூடிய எவரெஸ்ட் இன்ஜினியரிங் எவரெஸ்ட் நம்பர் 2, எவரெஸ்ட் நம்பர் 3, ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்ட்ரீஸ் போன்றவை அங்கே இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய குருப் நிறுவனம். சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேலே வேலை செய்யக்கூடிய மிகப் பெரிய நிறுவனம். மிகப் பெரிய வேலைகளை எல்லாம் 'பெல்' நிறுவனத்திலே இருந்து செய்யக்கூடிய மிகப் பெரிய ஸ்தாபனம் அது. அதில் தொழில் நெருக்கடி ஏற்பட்டு கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்குப் பட்டினியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நிர்வாகம், பேங்க் உதவியோ அல்லது அரசாங்க உதவியோ கிடைத்தால் அந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த இயலும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. நான் இது குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன். அதே போல் ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் என்பது தனி நிறுவனம். அதை எப்படி இதிலே ஒன்றாகச் சேர்த்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் கிட்டத்தட்ட பத்து ஆண்டுக் காலமாக திறக்கப் படாமல் இருக்கிறது. இது மத்திய அமைச்சருக்குச் சொந்தமானது.

1990 மே 8]

தலைவர் அவர்களே, தயவு செய்து மணியடித்து விடாதீர்கள். இதிலே முக்கியமான 5 நிறுவனங்கள் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். தொழில் மானியத்தில் பேசுவதுபோல் பேசக்கூடாது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவர் அவர்களே, அந்த ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் மத்திய அமைச்சருக்குச் சொந்தமானது. அதையும் திறப்பதற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். 'லிக்விடேட்டர்' அந்தக் கம்பெனிக்குப் போட்டு இருக்கிறார்கள். எனவே அரசாங்கத்தின் உதவி கிடைத்தால், அதையும் திறக்க முறையாக முயற்சி செய்தால் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அடுத்து நியுசிட்டி நிறுவனம் பற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். ஆகவே இதை எல்லாம் திறப்பதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, எவரெஸ்ட் இன்ஜினியரிங் நிறுவனம், ஆட்டோஸ்மித், அழகர் இன்டஸ்ட்ரீஸ், ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் ஆகிய நான்கு நிறுவனங்களும் ஒரு கூட்டுப் பங்குதாரர்களின் அமைப்பாகும். இதில் மூன்று நிறுவனங்களில் மொத்தம் 330 தொழிலாளர்களும், நியுசிட்டி இன்ஜினியரிங் நிறுவனத்தில் மொத்தம் 182 தொழிலாளர்களும் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டுமென்ற நோக்கோடுதான் தொழில் துறை, இன்டஸ்டிரியல் ரிகன்ஸ்ட்ரக்ஷன் பாங்க் ஆப் இந்தியாவிற்குப் பரிந்துரை செய்து, 2¼ கோடி ரூபாய் தேவை என்று நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். விரைவில் அந்தத் தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நியுசிட்டி இன்ஜினியரிங் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், கோவையில் இருக்கக்கூடிய 'ஏ டு இசட்'' என்ற ஒரு பெரிய நிறுவனம், இதை ஏற்று நடத்த முன்வந்திருக்கிறது. அவர்களும் வங்கியின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வங்கியின் உதவி கிடைத்ததற்கு பிறகு தொடர்ந்து செயல்படும். இதற்கிடையில் கோவையில் உள்ள தொழில் துறை ஆணையாளர் அலுவலகத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தால்தான், வங்கி கடனுதவி தருவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எவரெஸ்ட் இன்ஜீனியரிங் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாலே ஒப்பந்தம் ஏற்பட்டும், இதுவரை அது திறக்கப் படாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்கி உடனடியாக திறக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா ? ராமகிருஷ்ணா இன்டஸ்டிரீசைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் நீண்டகாலமாக வேலை வாய்ப்பை இழந்து பலபேர் இறந்துவிட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதைத் திறப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : எவரெஸ்ட் இன்ஜினியரிங் நிறுவனம், அழகர் இன்டஸ்டிரீஸ், ஆட்டோ ஸ்மித், ராமகிருஷ்ணா இன்டஸ்டிரீஸ் ஆகிய இந்த நிறுவனங்கள் நிதி உதவி வேண்டி வங்கிகளை அணுகி இருக்கிறார்கள். ஆனால் நியுசிட்டி இன்ஜீனியரிங் கம்பெனி இதுவரை நிதி வேண்டுமென்று எந்த நிதி நிறுவனத்திடமும் அணுகவில்லை. இருந்தாலும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இந்த நிறுவனம் மீண்டும் செயல்பட வேண்டுமென்ற நோக்கோடு வேறு நிறுவனங்களை அணுகி இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த இயலுமா என்று பரிசிலித்த நேரத்தில்தான், கோவையில் இருக்கிற இன்னொரு நிறுவனமான 'ஏ டு இசட்' நிறுவனம் வங்கி உதவி கிடைத்தால் இந்த நிறுவனத்தை தாங்கள் ஏற்று நடத்தலாம் என்று அவர்கள் ஆலோசனை தந்திருக்கிறார்கள். இந்த வங்கி சம்பந்தப்பட்ட தொழிலாளர் பிரச்சினை சிவில் நீதி மன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் தான் அந்த வழக்கு முடிந்தபின், வங்கிகள் நிதி உதவி தர இயலும் என்று தெரிவித்திருப்பதன் காரணமாக அந்த நிறுவனத்தை உடனடியாகத் திறப்பதற்கான வாய்ப்பு இப்போது இல்லை. அந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான நடவடிக்கை, தொழில்துறை மூலமாக தொடர்ந்து எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழிற் சாலைகள் 4-ம் சேர்ந்து கூட்டு நிர்வாகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே இவைகளில் வேலை செய்த 1,000-பேரோ அல்லது 500 பேரோ அங்கே பணியாற்றிய தொழிலாளர்கள், திரு. நடராசன் அவர்கள் சொன்ன மாதிரி, ஒருவர் இறந்து விட்டார். சில பேர் இறக்கிற மாதிரி இருக்கிறார்கள். ஒரு தொழிலைத் தொடங்கும்போது பல பேர் வேலைக்குச் சேர்கிறார்கள். திடீரென்று வேலையை விட்டு அவர்களை விரட்டுவது, அல்லது தொழிற்சாலைகளை மூடுவது , அதன் காரணமாக பாதிப்பு

1990 மே 8]

ஏற்படாமல் இருப்பதற்கு, அதற்குக் காரணமாக அந்த நிறுவனம் இருந்தால் அதை உடனடியாக அரசாங்கம் எடுத்து நிர்வாகஸ்தர்களுக்குத் தண்டனை கொடுத்து, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் துறையின் மூலம் சான்றிதழ்கள் பெறுகிற நேரத்திலேயே, தொழில்கள் நடத்துவதற்கு ஆன சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்த பிறகு தான், சிறு தொழில்கள் தொடங்குவதற்கான அனுமதியே வழங்கப்படுகிறது. பல்வேறு காரணங்களால் அந்தத் தொழில் நலிவுறுகிறபோது, நலிவுற்ற தொழில்களை மீண்டும் புனர் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்கிறது. பல்வேறு நிதி நிறுவனங்கள் இப்படிப்பட்ட நலிவுற்ற தொழில்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் உதவியை நல்கி, தொழில் நசித்துவிடாமல் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் அளிக்கும் வகையில், நடவடிக்கைகளை மேற் கொள்கிறார்கள். அரசும், நிதி நிறுவனங்களும் எச்சரிக்கையாக இருந்தும் கூட தனியார் சிலர் அரசின் சலுகைகளைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழிலைத் தொடங்குவதும், அதன் மூலம் கிடைக்கின்ற மூலதனத்தைக் கொண்டு வேறு ஒரு தொழிலுக்குத் தாவுவதும் இப்படி அவர்கள் திட்டமிடாமல் பணிகளை மேற்கொள்வதன் மூலமாகத்தான், அதன் காரணமாகத்தான், தொழில் துறையில் நலிவு ஏற்படுகிறது. இத்தகைய நலிவுகளைப் போக்குகிற வகையில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க, தொழில் துறை மூலமாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா.....

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். அவையின் நடவடிக்கைகளைக் கடந்த 15 மாதங்களாகத் தாங்கள் கவனித்து வந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். ஒருவர் வினாக் கேட்டிருந்தால், 2 துணை வினாக்கள் அனுமதிக்கிறேன். இரண்டு பேர் கேட்டால் ஆளுக்கு ஒன்று அனுமதிக்கிறேன். 10 பேர் கேட்டாலும் ஆளுக்கு ஒன்று என்று அனுமதிக்கிறேன். இதுதான் இதுவரைக்கும் கடைபிடித்து வந்திருக்கிற நடைமுறை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொண்டு, அடுத்த வினாவுக்குப் போகிறேன்,

9–35 மணி

திரு. சோ. அழகர்சாமி : On a point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் கேட்டது தனித் தனிக் கேள்வியாக. அதை ஒன்றாகத் தாங்கள் இணைத்துவிட்டீர்கள். தனித் தனியாகக் கேட்டிருந்தும் நாங்கள் ஒவ்வொருவரும் கேட்டதையும் ஒன்றாக இணைத்ததன் காரணமாக ஒரே கேள்வி ஆகிவிட்டது. ஒரே கேள்வியில் விளக்கம் பெற முடியாது. கேள்விக்குப் பிரயோஜனமும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை 10 பேர் தனித் தனியாகக் கேட்கலாம். கேட்பதற்கு உரிமை உண்டு. உரிமை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் கேள்வியைக் கேட்கிறபோது, 10 பேர் கேள்விக்கும் ஒன்றாகத்தான் விடை சொல்ல முடியுமே தவிர, தனித் தனியாக விடை சொல்ல முடியாது. அது இதுவரைக்கும் கடைப்பிடித்த நடைமுறைதான். அதை இப்போது மாற்ற முடியாது. உங்களுக்காக விதி விலக்கு என்று கொடுத்தால் பிற்காலத்தில் இதையே நான் கடைபிடிக்க வேண்டியிருக்கும். இது விதிவிலக்குதான். உங்களுக்குக் கொடுத்தால் அது விதி விலக்குதான். ஏனென்றால் இது 15 மாதங்களாக நான் கடைபிடித்து வருகின்ற முறை (குறுக்கீடு) இதில் வாதத்திற்கு இடமே கிடையாது.

பார்வையற்ற பட்டதாரிகள்

*1055 திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பார்வையற்ற பட்டதாரிகள் அரசுப் பணியில் சேர சலுகை வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடல் ஊனமுற்றவர்கள் அரசு வேலை வாய்ப்புப் பெறுவதற்கு மூன்று சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம், கை கால் ஊனமுற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம் வாய் பேச முடியாதவர்களுக்கு ஒரு சதவிகிதம் என்று வழங்கப்படுகிறது. இது தவிர, பார்வையற்றவர்களுக்கு வேறு எந்த தனிச்சலுகையும் இல்லை.